## ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இணைந்த சேவையின் அலுவலக ஊழியர் சேவையின் IIIஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்

1.0 ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தில் நிலவும் அலுவலக ஊழியர் சேவையின் IIIஆம் தரத்திற்கான வெற்றிடங்களுக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு இணைந்த சேவைகள் நாயகத்தின் அனுமதியின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2.0 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் பிரகாரம் திறன்கள் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் நிலவும் வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுவர்.

3.0 ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தில் மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 8.0 அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனங்கள் நடைமுறைப்படுத்தப்படும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிட எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் பூர்த்தி செய்யாமல் விடும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

**4.0** சம்பளம் - 03/2016ஆம் இலக்க மற்றும் 2016.02.25ஆம் திகதிய பொது நிர்வாக சுற்று நிருபத்தின் பிரகாரம், அலுவலக ஊழியர் சேவையின் III, II மற்றும் Iஆம் தரங்களுக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் PL 1-2016 ரூ. 24,250/- 10 X 250/- 10 X 270/- 10 X 300/- 12 X 330/- ரூ. 36,410/- ஆகும். **ரூ. 27,020/=க்கு அப்பால் செல்வதற்காக IIஆம் தரத்திற்கு உயர்வடைதலும், ரூ.29,750/=க்கு அப்பால் செல்வதற்காக Iஆம் தரத்திற்கு உயர்வடைதலும், ரூ. 32,780/= க்கு அப்பால் செல்வதற்காக விசேட தரத்திற்கு உயர்வு பெறுதலும் வேண்டும். குறித்த சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொடுப்பனவுகள் வழங்கப்படும்.**

5.0 பதவிக்குரிய ஓய்வூதிய சம்பள முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு உத்தியோகத்தர் கட்டுப்படல் வேண்டும்.

6.0 முதலாவது நியமனத்தைப் பெற்ற சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது 03 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விசேடமான காரணங்கள் அடிப்படையில் அக் காலப்பகுதி பூர்த்தியாவதற்கு முன்னர் எவரேனும் ஒரு உத்தியோகத்தரை மாற்றம் செய்தல் வேண்டும் எனில், நியமன அதிகாரிக்கு அது குறித்து அதிகாரம் உண்டு.

7.0 தகைமைகள் - அலுவலக ஊழியர் சேவையின் IIIஆம் தரத்தின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும்.

(அ) இலங்கை பிரசையாதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதியத்துடனான நியமனம் பெற்றுள்ளோருக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.

(இ) சிறந்த நடத்தையும் தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) கல்வித் தகைமைகள்

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு ஆகக் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(உ) அரச சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் Vஆம் அத்தியாயத்தின் படி அரச சேவையில் நியமிப்பதற்கு தகுதியற்றவராக இருத்தலாகாது.

அனைத்து விண்ணப்பதாரிகளும் பதவிக்கு உரிய அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

8.0 விண்ணப்பங்கள் கோரல்

பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு அலுவலக ஊழியர் சேவையில் காணப்படும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| அமைச்சு | திணைக்களம் | பிரதேச அலுவலகம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| உள்நாட்டு அலுவல்கள், வயம்ப அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் | ஆட்களை பதிவு செய்யும் | தலைமை அலுவலகம் | அலுவலக ஊழியர் | 12 |

9.0 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின் பேரில் விண்ணப்பதாரிகளின் அடிப்படைத் தகைமைகளைப் பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினத்திலேயே நடைபெறும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் திறன் ஒழுங்கு வரிசையை முற்றாகப் பின்பற்றி தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் அலுவலக ஊழியர் சேவையின் IIIஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர். விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழி மூலத்தை தெளிவாக விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடல் வேண்டும் என்பதோடு, கட்டமைக்கப்பட்ட அம் மொழி மூலத்திலேயே நடாத்தப்படும்.

கட்டமைப்பான நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் நடைமுறை கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| தகைமைகள் | | புள்ளிகள் |
|---|---|---|
| பதவியில் பெற்றுள்ள அனுபவம்<br>(அதிகூடிய 5 வருடங்களுக்காக கருத்திற் கொள்ளப்படும்) | | 10 |
| தொடர்பாடல் தகைமை | | 5 |
| கல்வித் தகைமைகள் | க.பொ.த உயர்தரம் சித்தியடைந்துள்ளமை | 5 |
| | க.பொ.த சா/தரப் பரீட்சையில் கணிதம், ஆங்கில மொழி, இரண்டாம் மொழி மற்றும் வேறு அரசகரும மொழியில் திறமைச் சித்தி பெற்றிருத்தல். (அதிக பட்சம் 5 பாடங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.) | 10 |
| தோற்றம் | | 5 |
| வெளிச் செயற்பாடுகள் (விளையாட்டு/ சமூகசேவை ........ போன்றவை) | | 5 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைகள் | | 10 |
| மொத்தப்புள்ளிகள் | | 50 |

குறிப்பு – பதவி குறித்து பெற்றுள்ள அனுபவம், கல்வித் தகைமைகள் மற்றும் வெளிச் செயற்பாடுகள் தொடர்பில் உரிய சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். அச்சான்றிதழ்கள் விண்ணப்பம் கோரும் இறுதி தினத்தன்று செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

10.0. விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாகவும், பிழையின்றியும் விபரங்களை வழங்கவேண்டும். தகைமைகளைப் பரிசீலிக்கும்போது எவரேனும் ஒரு விண்ணப்பதாரி தகைமையற்றவரெனத் தெரிய வந்தால் எச்சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பத்தகைமை இரத்துச் செய்யப்படலாம்.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்படும் விபரங்கள் எச்சந்தர்ப்பத்திலாவது பொய்யானவை என்று தெரியவரின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

11.1 இத்துடன் காணப்படும் மாதிரிப் படிவத்திற்கு அமைவாக விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கு அமைவாக காணப்படாத சரியான முறையில் பூர்த்தி செய்யப்படாத குறைப்பாடுகளுடனான விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரிகளே ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

11.2 விண்ணப்பப் படிவத்தை இட்டு அனுப்பும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் “அலுவலக ஊழியர் சேவையின் IIIஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல்” எனக் குறிப்பிடவும். அனைத்து விண்ணப்பப் படிவங்களையும் 2017.04.04 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு ஆணையாளர் (நிர்வாகம்), ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், 10ஆம் மாடி, சுஹுருபாய, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

12.0 இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்கூட்டிய கருத்துக்கமைய உரிய தினத்திலோ அல்லது அத் தினத்திற்கு முன்னரோ விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரிகளும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இருப்பினும் அவ்வாறு அழைக்கப்படுதலானது விண்ணப்பதாரி இப் பதவிக்குரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக் கொண்டதாக கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து, அறிவித்தலின் பிரகாரம் தகைமைகளைப் பெற்றுள்ளனரா என்பதை பரிசீலிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லை எனத் தெரிய வந்தால் அவர்களது விண்ணப்பத் தகைமை இரத்து செய்யப்படும்.

13.0 விண்ணப்பதாரிகள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றை நேர்முகப்பரீட்சைக் குழுவிற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

I. ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் அடையாளஅட்டை.

II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

14.0. இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயமிருப்பின் அது தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் கூறப்பட்டுள்ள பொது விதிகளுக்கு இணங்கச் செயற்படுவதற்குக் கட்டுப்பட்டுள்ளார்கள்.

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கட்டளைப்படி

பீ.வீ. குணதிலக
ஆணையாளர் நாயகம்
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்

2017 மார்ச் மாதம் 16ஆம் திகதி
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்,
சுஹுருபாய,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

<u>அலுவலக ஊழியர் சேவை IIIஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல்</u>

அலுவலகப் பயன்பாட்டிற்காக

விண்ணப்பிக்கும் ஊடகமொழி

சிங்களம் - 2

தமிழ் - 3

ஆங்கிலம் - 4

பணிபுரிய விருப்பம் தெரிவிக்கும் அமைச்சு : ........................................................

திணைக்களம் : ........................................................

பிராந்திய அலுவலகம் : ........................................................

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................
2. முழுப்பெயர் : ..........................................................................
3. தேசிய அடையாளஅட்டை இலக்கம் :
4. நிரந்தர முகவரி : ..........................................................................
   ..........................................................................
5. பால் : பெண் 1 – ஆண் - 0
6. பிறந்த திகதி : வருடம் மாதம் திகதி
7. தொலைபேசி இலக்கம் :
8. கல்வித் தகைமைகள் :

   1. முதல்முறைப் பெறுபேறு – சுட்டெண் .............. வருடம் .................... மாதம் ................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1 | | 6 | |
| 2 | | 7 | |
| 3 | | 8 | |
| 4 | | 9 | |
| 5 | | 10 | |

III. இரண்டாம்முறைப் பெறுபேறு: சுட்டெண் : ………….. வருடம் …………………. மாதம் ……………………………

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1 | | 6 | |
| 2 | | 7 | |
| 3 | | 8 | |
| 4 | | 9 | |
| 5 | | 10 | |

8 .1 க.பொ.த. (உ.தர) பரீட்சை தொடர்பான விபரம்

i. பரீட்சையின் வருடமும், மாதமும் : ………………………………………………
ii. சுட்டெண் : ………………………………………………
iii. பெறுபேறு

| பாடம் | தரம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |

9. வேறு தகைமைகள்:
.................................................................................................................................................
.................................................................................................................................................

10. பதவிக்கு உரியதாகப் பெற்றுள்ள அனுபவம் :

.................................................................................................................................................
.................................................................................................................................................

11. விளையாட்டு மற்றும் வெளிச் செயற்பாடுகள் :

.................................................................................................................................................
.................................................................................................................................................

12. நீங்கள் எப்போதாவது ஏதேனுமொரு குற்றத்திற்காக நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?

(உரிய கூட்டில் ✓ அடையாளம் இடுங்கள்.) (ஆம் எனில் விபரத்தைக் குறிப்பிடுங்கள்)

ஆம் ☐ இல்லை ☐

13. விண்ணப்பதாரியின் உறுதியுரை

அ. இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் நான் அறிந்தவரை உண்மை எனவும் சரியானவை எனவும் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன். இதன் ஏதாவது ஒரு பகுதி பூர்த்தி செய்யப்படாமையினால் மற்றும்/அல்லது பிழையாகப் பூர்த்தி செய்யப்படுவதால் ஏற்படும் நட்டத்தை ஏற்றுக் கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும் இதன் சகல பகுதிகளும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதை வெளிப்படுத்துகின்றேன்.

ஆ. என்னால் செய்யப்பட்டுள்ள இந்த வெளிப்பாடு பொய்யானது என்பது நிரூபிக்கப்பட்டால், நியமனம் செய்யப்படுவதற்கு முன் தகைமையற்றவராவேன் என்பதையும் நியமனம் பெற்றதன் பின்னர் பணியிலிருந்து நீக்கப்படுவதற்கு கட்டுப்படுகிறேன் என்பதையும் நான் அறிவேன்

இ. இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விபரத்தையும் பின்னர் மாற்றமாட்டேன்.

.................................... ..........................................................................

திகதி விண்ணப்பதாரியின் ஒப்பம்